**சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்.**

முன்னிலை - திருமதி. S. இந்திராகாந்தி, எம்.எல்.,

சார்பு நீதிபதி, நாகப்பட்டினம்.

திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் ஐப்பசி மாதம் 05 -ம் நாள்

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22 ம் நாள் புதன்கிழமை

**இடை மனு எண்.02/2025 ல் அசல் வழக்கு எண்.12/2022**

ரகுராமன் (எ) ரகுநாதன் ......மனுதாரர் / வாதி

/எதிர்/

திராவிடச்செல்வி .....எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 16.10.2025 அன்று என் முன் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர் / வாதிக்காக வழக்கறிஞர் திரு. P. ஸ்ரீதரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்காக வழக்கறிஞர் திரு. டி.ரவிச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும்., ஆவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் பகரும்........

**/ உத்தரவு /**

1. இம்மனு கடந்த 04.04.2025 அன்று மனுதாரர் வாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட தள்ளுபடி உத்தரவினை ரத்து செய்து, அசல் வழக்கினை திரும்ப கோப்பிற்கு எடுக்க உத்தரவிட கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 9, விதி 9 ன் படி இம்மனு மனுதாரர்/ வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2025.10.22 18:53:47 +0530

**2. மனுதாரர்  தரப்பில் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்**

மனுதாரர் இந்த மனுவின் மனுதாரர் என்றும், அசல் வழக்கின் வாதி என்றும்,  மனுதாரரின் தந்தை உடல்நலம் சரியில்லாமல் அவருடன் இருந்து சிகிச்சைக்கு செல்ல வேண்டிய நிலையிலும், வாய்தா தேதிக்கு 4 நாட்கள் முன்பாக சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதால் 04.04.2025 தேதியில் நீதிமன்றம் ஆஜராக முடியவில்லை என்றும்,  மனுதாரர் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ இருந்து ஆஜராகாமல் இருக்கவில்லை என்றும், எனவே 04.04.2025 ல் வாதியின் தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்பட்ட அசல் வழக்கினை மீண்டும் கோப்பிற்கு எடுக்க  உத்தரவிட வேண்டும் என்றும் குறிப்பிட்டு மனுதாரர் மனுதாக்கல் செய்துள்ளார்.

**3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்**

இம்மனுவில் கண்டுள்ள சங்கதிகள் ஏற்கக்கூடியவை அல்ல என்றும், மனுதாரர்/வாதி வா.சா.1 ஆக முதல் விசாரணை விசாரிக்கப்பட்ட நிலையில் பல வாய்தாக்கள் ஆஜராகாமல் ஒத்தி வாங்கப்பட்டும் இறுதியில் வாதி அழைக்கப்பட்டும் ஆஜராகாததால் கடந்த 04.04.2025 ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், இந்த எதிர்மனுதாரருக்கு வீண் தொல்லையும், தொந்தரவும் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறார் என்றும், எனவே, எனவே இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டு எதிர்மனுதாரரால் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம்**

மனுதாரர்களின் மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே தீர்வு காணப்பட வேண்டிய பொருண்மை ஆகும்.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI Date: 2025.10.22 18:53:54 +0530

**5.** மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. ஆணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**6. <u>தீர்வு</u>**

1) அசல் வழக்கு நிலுவையில் இருந்தபோது மனுதாரரின் தந்தை உடல்நிலை சரியில்லாமல் சிகிச்சை பெற்று வந்த நிலையில் வாய்தா தேதிக்கு 4 நாட்கள் முன்பு சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதால் மனுதாரரால் நீதிமன்றம் ஆஜராக முடியாமல் போய்விட்டது என்றும், அதனால் மனுதாரருக்கு எதிராக கடந்த 04.04.2025 ல் தள்ளுபடி உத்தரவு பிறப்பிக்கபட்டுள்ளது என்றும், எனவே தள்ளுபடி உத்தரவினை ரத்து செய்து அசல் வழக்கினை மீண்டும் கோப்பிற்கு எடுக்க உத்தரவிட வேண்டும் என்றும் குறிப்பிட்டு மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த எதிர்மனுதாரருக்கு வீண் தொந்தரவும், தொல்லையும் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தில் மனுதாரர் செயல்பட்டுவருவதால் இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிர்மனுதாரர்ர் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) மனு, அபிடவிட், எதிருரை மற்றும் வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக தாவா தொகை கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 04.04.2025 அன்று மனுதாரர் நீதிமன்றம் ஆஜராகாததால் மனுதாரருக்கு எதிராக தள்ளுபடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் தாக்கல் மேற்படி தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை ரத்து செய்யக்கோரி மனு தாக்கல்

S INDRA GANDHI
Digitally signed by S INDRA GANDHI
Date: 2025.10.22 18:53:59 +0530

செய்யப்பட்டுள்ளது. மேற்படி மனுதாரரின் மனுவிற்கு எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்களுக்கு ஆதரவாக வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்து தனது மனுவில் கூறியுள்ள காரணங்களை நிரூபணம் செய்யவில்லை. மாறாக அவ்வாறு மனுவில் கூறியுள்ள காரணங்கள் பொய்யானது என எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியமோ, சான்றாவணங்களோ தாக்கல் செய்யப்படவில்லை. இருப்பினும், அசல் வழக்கினை கோப்பில் எடுத்து விசாரணை செய்யப்படாவிடில் இருதரப்பினருக்கும் உள்ள தாவா தொகை குறித்த பிரச்சினைகளுக்கு இறுதியான முடிவு எடுக்கப்படாத சூழ்நிலை உருவாகி அது பல பிரச்சினைகளுக்கு வழிவகுக்க நேரிடும் என்பதனை இந்நீதிமன்றம் கருத்தில் கொள்கிறது.

4) மேலும், மனுதாரரின் கட்சியை கேட்டு இருதரப்பு முழுமையான விசாரணைக்கு பிறகு பிறப்பிக்கப்படும் தீர்ப்பே முழுமையான தீர்ப்பாக இருக்கும் என்பதை கருத்தில்கொண்டு மனுதாரர் தரப்பு கட்சியை நிரூபிக்க ஒரு வாய்ப்பளிப்பது சட்டப்படியும், நியாயப்படியும் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்து இம்மனுவை செலவுத் தொகையுடன் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**V. முடிவாக,**

**மனுதாரர்கள், 2ம் எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகையாக ரூ. 500/-ஐ எதிர்வரும் 03.11.2025ம் தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் மனு**

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI
Date: 2025.10.22 18:54:06 +0530

**அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது.**

**அழைக்க வாய்தா 03.11.2025**

என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சுருக்கு மொழியப்பட்டு அவரால் எழுதிப் பெயர்த்து தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22-ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI Date: 2025.10.22 18:54:12 +0530

சார்பு நீதிபதி,

நாகப்பட்டினம்.

**பின் இணைப்புகள்**

| | | | |
|---|---|---|---|
| **1.** | மனுதாரர் தரப்பு சாட்சி | : | இல்லை |
| **2.** | மனுதாரர் தரப்பு சான்றாவணம் | : | இல்லை |
| **3.** | எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம் | : | இல்லை |
| **4.** | எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம் | : | இல்லை |

S INDRA GANDHI Digitally signed by S INDRA GANDHI Date: 2025.10.22 18:54:17 +0530

சார்பு நீதிபதி,

நாகப்பட்டினம்.

Draft order / Fair order

சார்பு நீதிமன்றம், நாகப்பட்டினம்

**I.A.No.02/2025 in** O.S.No.12/2022 ,
நாள் : 22.10.2025